தற்போது, பல்வேறு தரப்பினரிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், ஏற்கெனவே அறிவித்த 15 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்குப் பதிலாக, 50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பதிலாக 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் வரும் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கூட்டுறவு உணவு, மீன் வளம், கால்நடை பராமரிப்பு, உயர் கல்வி, பள்ளிக்கல்வி ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்து அவற்றைத் தரம் உயர்த்தப்படுகின்ற வரலாறு தமிழகத்திலே நடைபெறுகிறது. கல்வியாளர்களே வியக்கத்தக்க அளவிற்கு, இமயத்தை எட்டுகின்ற அளவிற்கு வளர்ச்சியை உருவாக்கியிருக்கின்ற ஆற்றல்மிக்க முதலமைச்சர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள். அனைத்துத் துறைகளிலும் வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குப் பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கூட்டுறவுத் துறை பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்று சிறப்பாகச் செயல்பட்டுவரும் நிலையில், கூட்டுறவுத் துறையின் வரலாற்றில்

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் மேலும் ஒரு மைல் கல்லாக, சிறப்புமிக்கத் திட்டமாக, விதிகளுக்குட்பட்டு, புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க இயலாத, ஏழையெளிய மக்கள் வசிக்கும் குக்கிராமங்களில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே நேரடியாகச் சென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்கும்வகையில் 3,501 'அம்மா நகரும் நியாய விலைக் கடைகள்' தற்போது அமைக்கவும், தேவைக்கேற்ப கூடுதலாக அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் அமைக்கவும், சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், செம்மடுவு கிராமத்தில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பங்களிப்புடன் ரூபாய் 15.85 கோடி மதிப்பீட்டில் கூட்டுறவுத் துறையின் அலுவலர்கள் மற்றும் சங்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க மாநில அளவிலான புதிய பயிற்சி நிலையம் அமைக்கவும், தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையாக, கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு நவீன சேவைகளை வழங்கும்பொருட்டும், புதிய கட்டடங்கள் கட்டவும் மற்றும் நவீனமயமாக்கவும், கூட்டுறவுநிறுவனங்களில்பயன்படுத்தப்படாமல் உள்ள இடங்களில் திருமண மண்டபங்கள், அலுவலகக் கட்டடங்கள் கட்டவும், கூடுதலாக 189 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் துவக்கவும், விதி 110–ன்கீழ் அறிவிப்புகள் வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய மக்களின் முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பாகவும், கூட்டுறவுத் துறையின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு இன்றியமையாத உணவாக இருக்கின்ற, புரதச்சத்துமிக்கது மீன் உணவு. அந்த மீன் உணவை அளிக்கின்ற மீனவர்கள் நலன், அந்த மீனவர்கள் நலன் என்று சொல்லும்போது, மீன் வளம். அந்த மீன் வளம் பெருக வேண்டுமென்று சொன்னால், உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும். எனவே, இதனை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழு முத்தான திட்டங்களை நமக்கு, மீனவ மக்களுக்கு, மீன் வளத்திற்கு,

மீனவர் நலத்திற்கு அளித்திருக்கிறார்கள். எனவே, மீனவ மக்கள் சார்பிலும், என் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்துடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள் இன்றைக்கு 7 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணாக்கர்கள் சார்பாகவும், உயர் கல்வித் துறையின் சார்பாகவும், மனமார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு ஒரே ஒரு உண்மையை மட்டும் நான் இந்த நேரத்தில் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பகாலம் முதல் இன்றுவரை அரசு கல்லூரிகள், அரசினுடைய உறுப்புக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என மொத்தம் 143 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் உயர் கல்வித் துறையின்கீழ் அறிவிக்கப்பட்ட 65 கல்லூரிகளிலே 45 கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக அறிவிக்கப்பட்டன. அதன்பின் அண்ணன் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு 20 கல்லூரிகள் உயர் கல்வித் துறையின்கீழ் அறிவிக்கப்பட்டன. அவற்றில் 12 கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக அறிவிக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக, இதுவரை 2011 முதல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகு 57 கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவிலே 3 கல்லூரிகளை அறிவித்தார். அதோடு சேர்த்து இன்றைக்கு 7 கல்லூரிகள். இந்த 10 கல்லூரிகளைச் சேர்க்கின்றபொழுது, 2011–க்குப் பிறகு 67 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) பெருமை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையே சேரும். அதற்கு முன்பாக அதாவது 2011–க்கு முன்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக வெறும் 76 கல்லூரிகள் மட்டுமே இருந்தன. ஆகவே, இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணாக்கர்களுடைய உயர் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு

தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை உயர் கல்வித் துறை சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு உணவுத் துறையை அன்றாடம் வழிகாட்டி பாதுகாத்து வந்தார்கள். அதற்காக பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து தந்து கொண்டிருந்தார்கள். அந்தவகையிலேதான், 2011 ஆம் ஆண்டு வரை 12.41 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருந்த கிடங்குகளின் கொள்ளளவை, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 22.25 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்தி சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியை அப்படியே, அவர்களின் ஆசியோடு வழி நடத்திச் செல்கின்ற அருமைக்குரிய அண்ணன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள், இன்றைக்கு எங்களுடைய உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறைக்குப் பல்வேறு முத்தான அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டும் விட்டுவிடாமல், இன்றைக்கு அதற்குக் கூடுதலாக பலம் சேர்க்கின்ற வகையில் காவேரி பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில், விளைவிக்கப்படுகிற நெல்லுக்கு, silo போன்ற கிடங்கு கட்டமைப்புகளைக் கொடுத்துள்ளார்கள். மேலும், நகரும் நியாய விலைக் கடைகளைக் கொடுத்து, பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உணவுத் துறையின் சார்பில், மக்களின் சார்பில் அன்பான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 20]

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியில் உள்ள மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து, கால்நடைக் கிளை நிலையம், மருந்தகம், மருத்துவமனை போன்றவை வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தனர். அதை மனதிலே கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறைக்கு விதி 110–ன்கீழ் பல அறிவிப்புகளை வெளியிட்டதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

5. கவன ஈர்ப்பு

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, லாயிட்ஸ் காலனி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கான வாடகை மற்றும் பராமரிப்புக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லாயிட்ஸ் காலனி பகுதியில் ஏறத்தாழ 1962–ல் கட்டப்பட்ட அந்தக் கட்டடத்தில் வாடகை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, லாயிட்ஸ் காலனி என்று Agenda–ல் இருக்கின்ற மாதிரி படித்துவிட்டு, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள். பின்னர், உங்களுக்குக் கேள்வி கேட்க வாய்ப்புத் தருகிறேன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி, லாயிட்ஸ் காலனி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கான வாடகை